2011 மே 27] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்படுகிற பேரவைத் தலைவரை, பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்துச் சென்று, பேரவைத் தலைவரது இருக்கையில் அமரச் செய்வது மரபாகும். எனவே, பேரவைத் தலைவர் அவர்களை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், ஆளுங்கட்சியை அடுத்த பிரதான சட்டமன்றக் கட்சியாக இருக்கும் தேசிய முற்போக்கு திராவிடக் கழக கட்சித் தலைவர் திரு. விஜயகாந்த் அவர்களும் அழைத்து வந்து, பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் திரு. விஜயகாந்த் அவர்களும் அழைத்து வந்து அவர்களது இருக்கையில் அமரச் செய்தார்கள்) (மேசையைத் தட்டும் ஒலி)

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறம் நாட்ட வந்தவரே! ஆணவம்சேர் மாற்றார்க்கு அறம் நாட்ட வந்த மாதரசே! (மேசையைத் தட்டும் ஒலி) கோடித் தொண்டர் படையை வழிநடத்தும் வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) சமுத்திரத்தின் கரையோரம் பிறந்த சாமானியன் ஆகிய என்னை, சரித்திரப் புகழ்மிக்க சபை நடுவில் ஆசனம் தந்து, அமர வைத்து, நடுநிலை காத்திட ஆணையிட்ட எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) கடலில் நீர் உள்ளவரை, என் உடலில் உயிர் உள்ளவரை, நன்றி உரைத்துக்கொண்டே நான் இருப்பேன் தாயே! நன்றியோடு தலை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவை விதி 8, உள்விதி

[பேரவைத் தலைவர்] [2011 மே 27

2—ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:

நியமனம் செய்யப்பெற்றவர்	*: திரு. ப. தனபால்*
முன்மொழிந்தவர்	*: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)*
வழிமொழிந்தவர்	*: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்*

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. ப. தனபால் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, வேட்புத் தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. ப. தனபால் அவர்கள், இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மிகுந்த அனுபவம் கொண்டவர், அமைதியானவர், என் சகோதரர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்குப் பாராட்டுரை வழங்குதல். முதலில் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய தொண்டனாகிய என்னை மூன்றாவது முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, நிதி அமைச்சராக்கி, அவை முன்னவர் என்ற ஒரு மாபெரும் பொறுப்பினை வழங்கி, தங்களை அழைத்துச் சென்று பேரவைத் தலைவருக்கான இருக்கையில் அமர வைக்கும் வாய்ப்பினை வழங்கிய, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) தரணி போற்றும் ஒப்பற்ற தலைவி, அகிலம் போற்றும் உத்தமத் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை, தங்கத் தாரகை, (மேசையைத் தட்டும் ஒலி)*